தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.

எண்.1/2012
நாள் 19–01–2012

## <u>செய்திக் குறிப்பு</u>

மின்கட்டணத்தை மாற்றியமைப்பதற்கான மனு மீது பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம்.

---

1. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகம் ஆகிய நிறுவனங்கள், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்பு 01–04–2012 முதற்கொண்டு அல்லது அதற்கு முன்பு நடைமுறைக்கு வருமாறு மின்கட்டணத்தை மாற்றியமைப்பதற்காக மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

2. மேற்சொன்ன மனுக்கள் ஆணையத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு முறையே மி.ம.1/2011 மற்றும் மி.ம2/2011 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுக்கள் குறித்த சிறப்பியல்புகள், முன்னனி செய்தி இதழ்களில் 02–12–2011 அன்று வெளியிடப்பட்டுள்ளன.

3. மேற்கண்ட மனுக்கள் குறித்து முடிவெடுப்பதன்பொருட்டு, ஆணையம், கீழ்க்கண்ட அட்டவணையின்படி பொதுமக்கள் கருத்துக்கேட்புக்கூட்டம் நடத்தவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள், இந்த நாட்களில் தங்களுக்கு அருகிலுள்ள பொதுமக்கள் கருத்துக்கேட்புக்கூட்டம் நடக்கவிருக்கும் இடங்களில் ஆணையத்தின் முன்பு ஆஜராகி தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம். பொதுமக்கள் கருத்துக்கேட்புக்கூட்டம் நடைபெறும் இடங்களில் காலை 9.30 மணி முதல் 11.00 மணி வரை ஆர்வமுள்ளவர்கள் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

### <u>பொதுமக்கள் கருத்துக்கேட்புக்கூட்டத்தின் நிகழ்ச்சிக்கான செயல் முறைத் திட்டம்</u>

| தேதி மற்றும் நாள் | ஊர் | இடம் | நேரம் |
|---|---|---|---|
| 30–01–2012 திங்கட்கிழமை | சென்னை | தமிழ் இசைச் சங்கம், (உயர்நீதி மன்றம் அருகில்) ராஜா அண்ணாமலை மன்றம், 5, எஸ்பிளனேட் சாலை, சென்னை– 108. | முற்பகல் 10.30 முதல் பிற்பகல் 5.00 மணி வரை |
| 02–02–2012 வியாழக்கிழமை | கோயம்புத்தூர் | மாநகராட்சி கலை அரங்கம், ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர். | முற்பகல் 10.30 முதல் பிற்பகல் 5.00 மணி வரை |
| 06–02–2012 திங்கட் கிழமை | திருச்சிராப்பள்ளி | ஜுபிளி பில்டிங், பார்பியர் ஹால், செயின்ட் ஜோசப் கல்லூரி, திருச்சிராப்பள்ளி–2. | முற்பகல் 10.30 முதல் பிற்பகல் 5.00 மணி வரை |
| 10–02–2012 வெள்ளிக் கிழமை | மதுரை | இந்திய மருத்துவச் சங்க அரங்கம், மதுரை மருத்துவக் கல்லூரி வளாகம், எண்.1, பனகல் சாலை, மதுரை–20. | முற்பகல் 10.30 முதல் பிற்பகல் 5.00 மணி வரை |

செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.